# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2274/02 - 2022 අප්‍රේල් මස 04 වැනි සඳුදා - 2022.04.04

*2274/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (2ஈ) பிரிவின் கீழான அறிவித்தல்***

உத்தேசித்துள்ள இலங்கை சமுத்திர வித்தியாலயத்தின் கல்வித் தர நிலையை மேம்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகம் நிர்மாணிக்கும் செயற்றிட்டம் மட்டக்குளி, காக்கைதீவு, கொழும்பு 15

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

1988 ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக காக்கைதீவு, கொழும்பு 15 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை சமுத்திர வித்தியாலயத்தின் கல்வித் தர நிலையை மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைந்து பல்கலைக்கழகம் நிர்மாணிக்கும் செயற்றிட்டத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2022.04.04 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளமான www.coastal. gov. lk இல் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளது.

01. கரையோரம் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, 12ஆம் மாடி, செத்சிறிபாய, இரண்டாம் கட்டம், பத்தரமுல்ல.

02. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், புதிய செயலகம், 4ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10.

03. மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.

04. மாவட்டச் செயலாளர் அலுவலகம், கொழும்பு.

05. பிரதேச செயலாளர் அலுவலகம், காலி வீதி, கொழும்பு.

06. மாநகர சபை, கொழும்பு.

07. கடற்றொழில் நீரியல் வள திணைக்களம், மாவட்ட அலுவலகம், தெஹிவளை.

08. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்து திணைக்களம், பிரதேச அலுவலகம், மொறட்டுவை.

இந்த உத்தேச செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2022.04.04 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

**பொறியியலாளர் ஆர். ஏ. எஸ். ரணவக்க,**
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவம்,

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலை பேசி இல. 011 - 2449754, 011- 2387922, 011 - 2449197
தொலை நகல் இல. 011- 2438005, 011- 2472623.

EOG 03 - 1061

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.